அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 4

| | |
|---|---|
| நேரம்: 120 மணித்துளிகள் | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| நாள்: 04.06.2022 | பக்கங்கள்: 12 |

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை

☐ பதினெட்டு ☐ ஏழு ☐ பன்னிரண்டு

2. கன்னியாய் வெந்நீர்க் கிணறுகள் அமைந்துள்ள இடம்

☐ மட்டக்களப்பு ☐ முல்லைத்தீவு ☐ திருகோணமலை

3. தோற்கருவிகளுள் ஒன்று

☐ மேளம் ☐ குழல் ☐ யாழ்

4. பலர்பாற் சொல்

☐ சிறுமி ☐ பள்ளி ☐ அவர்கள்

5. குளிர்காலத்தில் குளிர்

☐ குறையும் ☐ அதிகரிக்கும் ☐ இருக்காது

6. 800 என்பதன் எழுத்து வடிவம்

☐ எந்நூறு ☐ என்னூறு ☐ எண்ணூறு

7. படித்தல் என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ பருகுதல் ☐ கற்றல் ☐ நடத்தல்

8. தாயகத்தின் பெரிய நூலகம் அமைந்துள்ள இடம்

☐ யாழ்ப்பாணம் ☐ வவுனியா ☐ மன்னார்

9. நான் நேற்றுப் பள்ளிக்குச்

☐ செல்வேன் ☐ செல்கிறேன் ☐ சென்றேன்

10. குழலினிமை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ குழல் + இனிமை ☐ குழலி + இனிமை ☐ குழ + இனிமை

11. மானுக்குக் குட்டி போல எலிக்கு

☐ கன்று ☐ பிள்ளை ☐ குஞ்சு

12. ஆடிப்பிறப்பு அன்று காய்ச்சுவது

☐ கூள் ☐ கூழ் ☐ கூல்

13. கடல் + கரை என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ கடல்கரை ☐ கடற்கரை ☐ கடல்க்கரை

14. நாம் மாவீரர் நினைவைப் போற்றும் மாதம்

☐ தை ☐ மாசி ☐ கார்த்திகை

15. தலையில் குடையாம்; காலில் முள்ளாம். அது

☐ குண்டூசி ☐ தொப்பி ☐ கூடு

(15 x 1 = 15 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.**

1. தமிழீழம் ______________________ தாயகம் ஆகும்.
   (எங்களுடைய, எங்களை)

2. ______________________ச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
   (கற்றவரை, கற்றவருக்கு)

3. ஆசிரியர் ______________________ வெகுவாகப் பாராட்டினார்.
   (மாணவரால், மாணவரை)

4. இலையுதிர் காலத்தில் ______________________இருந்து இலைகள் உதிரும்.
   (மரங்களில், மரங்களை)

5. வெளியில் ______________ இருந்ததால், அவன் கம்பளி ஆடை அணிந்தான்.
   (சூடாக, குளிராக)

6. நான் படித்துக் கொண்டிருக்கிறேன். ______________________ என்னால் விளையாட வரமுடியாது. (அப்பொழுது, இப்பொழுது)

(6 x 1 = 6 புள்ளிகள்)

3. தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. Bird | 1. Vogel | 1. Fugl |
| 2. Diary | 2. Tagebuch | 2. Dagbok |
| 3. Snow puppet | 3. Schneemann | 3. Snømann |
| 4. Gift | 4. Geschenk | 4. Gave |
| 5. Nose | 5. Nase | 5. Nese |
| 6. Fox | 6. Fuchs | 6. Rev |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
|---|---|---|
| 1. Uccello | 1. Vogel | 1. Fugl |
| 2. Diario | 2. Dagboek | 2. Dagbog |
| 3. Pupazzo di neve | 3. Sneeuw pop | 3. Snemand |
| 4. Regalo | 4. Cadeau | 4. Gave |
| 5. Naso | 5. Neus | 5. Næse |
| 6. Volpe | 6. Vos | 6. Ræv |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
|---|---|---|
| 1. Fågel | 1. Lintu | 1. ____________ |
| 2. Almanacka | 2. Päiväkirja | 2. ____________ |
| 3. Snögubbe | 3. Luminukke | 3. ____________ |
| 4. Present | 4. Lahja | 4. ____________ |
| 5. Näsa | 5. Nenä | 5. ____________ |
| 6. Räv | 6. Kettu | 6. ____________ |

(6 X 1 = 6 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| கலகல | பாய்ந்து பாய்ந்து | பளபள |
| சுடச்சுட | வண்ணவண்ண | கடகட |

1. முயல் ____________ பற்றைக்குள் ஓடி மறைந்தது.
2. பூக்கள் ____________ நிறங்களில் காணப்படுகின்றன.
3. நாங்கள் ____________ எனச் சிரித்தோம்.
4. தங்க வளையல் ____________ என மின்னியது.
5. அப்பா தேநீரைச் ____________க் குடிப்பார்.
6. வண்டி ____________ என ஓடியது.

(6 X 1 = 6 புள்ளிகள்)

**5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. தமிழரின் / வீரத்துக்குச் / சான்றாகின்றன / நடுகற்கள்

_______________________________________________

2. உண்மை / தரும் / உயர்வைத் / என்றும்

_______________________________________________

3. இயற்கையைப் / பேண / வேண்டும் / நாம்

_______________________________________________

4. கல்வி / இளமையிற் / எழுத்து / சிலையில்

_______________________________________________

5. தந்தி / சாமுவேல் மோர்சு / கண்டுபிடித்தார் / முறையைக்

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழரின் முதன்மையான கொண்டாட்டங்கள் இரண்டையும் எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. திருகோணமலையில் கலக்கும் ஆறு எது?

_______________________________________________

_______________________________________________

3. நடுகல் வழிபாடு யாருக்காக நடத்தப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

4. வினைச்சொற்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

5. ஆண்பால், ஒன்றன்பால் என்பவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

ஆண்பால்: ____________________ ஒன்றன்பால்: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. **பின்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி ஆறு (6) சொல்லியங்கள் எழுதுக.**

1. நூலகம்
2. குளிர்காலம்
3. விளையாட்டுகள்

(6 X 2 = 12 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

காகங்கள் கூட்டமாக வாழும் பறவை இனம். அவை மக்களுடன் நெருங்கி வாழும் இயல்பு உடையவை. அவை சிறிய குச்சிகளைப் பொறுக்கி மரத்தில் கூடுகளைக் கட்டி, ஒற்றுமையாக வாழ்பவை. காகங்கள் கருமை நிறமானவை. அவை தமக்குக் கிடைக்கும் உணவைப் பகிர்ந்து உண்ணும் குணம் உள்ளவை. அவற்றின் அலகுகள் தடிப்பாக இருக்கும். அலகுகள் கடினமான உணவைக் கொத்தித் தின்பதற்கு உதவுகின்றன. பறவைகளில் அதிக அறிவுள்ள பறவையாகக் காகத்தைக் குறிப்பிடுவார்கள். காகங்கள் பற்றிய பல கதைகள் தமிழில் உள்ளன.

1. காகங்களின் இயல்பு என்ன?

 ______________________________________________

2. அவற்றின் அலகுகள் எப்படி இருக்கும்?

 ______________________________________________

3. அவை எவ்வாறு கூடுகளைக் கட்டுகின்றன?

 ______________________________________________

4. அவை தமக்குக் கிடைக்கும் உணவை எப்படி உண்கின்றன?

 ______________________________________________

5. காகங்களின் அலகுகள் எதற்கு உதவுகின்றன?

 ______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

2. **பிறந்தநாள் அழைப்பிதழை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

வணக்கம்,

நான் எனது 10ஆவது பிறந்தநாளை 11.06.2022 சனிக்கிழமை அன்று மாலை 16:00 மணிக்கு எனது வீட்டில் கொண்டாட உள்ளேன். இந்தக் கொண்டாட்டத்துக்கு உங்களை மகிழ்வுடன் அழைக்கிறேன். நீங்கள் வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

இனியா



1. இனியா 10ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறாள். ( )
2. அவள் ஞாயிற்றுக்கிழமை பிறந்தநாளைக் கொண்டாடுகிறாள். ( )
3. பிறந்தநாள் கொண்டாட்டம் 16:00 மணிக்குத் தொடங்கும். ( )
4. இனியா தனது பிறந்தநாளைப் பள்ளியில் கொண்டாடுகிறாள். ( )
5. இது ஒரு பிறந்தநாள் அழைப்பிதழ். ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 12 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |